

# சிந்திய முத்துக்கள் ...!

கவிஞர் கவிவளவன்

எழுத்துக்களம்
வெளியீட்டகம்

# சிந்திய முத்துக்கள்!

கவிஞர் **கவிவளவன்**

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
செம்பாக்கம், **சென்னை**–600 073

**உரிமை:** ஆசிரியருக்கே!
முதற் பதிப்பு நவம்பர் **2020**
திருத்தங்களுடன் March 2021

**© பதிப்புரிமைப் பெற்றது!**

**ஒளியச்சுக் கோவை, நூல் வடிவம்**
**K P Asokan, M.A., M.Sc., M.B.A., M.C.A., LLB**

**மின்நூல்—ரூ10.00/அன்பு**
**தாள் நூல்—அச்சில்**

Please visit **www.thadaakam.co.in.** a web magazine

**இது ஓர்**
**எழுத்துக்களம் வெளியீடு**
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு
**செம்பாக்கம், சென்னை – 73.**
**அலைபேசி : 99400 61280**

வணக்கம்,

சிந்தை யோட்டங்கள், சொற்களாய்க் குவிந்து, அவை மனக் காட்சிதனைப் படிமங்களாய்த் தீட்டும் போது, சிந்தையின் வடிவங்கள், சிறுசிறு வடிவங்களாயும், ஒரு சிறு படிமத்தின் வெளிப்பாடாயும் வெளிப்படுதல் உண்டு. அங்ஙனம், வெவ்வேறு, காலக் கட்டங்களில், தோன்றியப் பதிவுகளை நூல் வடிவம் காண முற்பட்ட போது, சின்னஞ்சிறிசுகளாய், இருந்தனவற்றையும், ஒரு சிறுவடிவக் கவிதைத் தொகுதியாக்கும் செயலே இந்நூல். இவ்வடிவில், இஃது இரண்டாவது நூல். எழுத்து என்றுமே காலத்தின் அளவுகோல். இவற்றுள் சில உணர்ச்சிப் பொங்க உள்ளம் விழுமியவை. அஃது அற்றைநாளின் சிந்தனை. மனம் தேடிய வினாக்களின் வடிவமும் உண்டு. உயிர்த்து மகிழ்ந்தப் பதிவுகளும் உண்டு. கருத்தைப் பகிருங்கள். என்றாவது, எந்நிகழ்விலாவது, பரிசு நூலாக வழங்கும் நிலைப்பாட்டின் செயல்வடிவமே இது. இவை ஒரு 40 ஆண்டுகாலத் தொடர் நிலையின், படிமம். வழக்கம்போல், நூல் வடிவம் செய்து வெளியிடும் , என்னுடைய இல்லாளுக்கும் நன்றி! படித்துச் சுவைப்போருக்கும் நன்றி!!.

**சென்னை—73**
**நாள்**: 22-11-2020

அன்புடன்,
**கவிவளவன்.**

# ஆசிரியரின் பிற நூல்கள்!

## தாள் நூல்

1. அழியாச் சொப்பனங்கள் - கவிதைகள் (மரபு மீறல்) ரூ.75/-
2. மனம் பூத்த மலர்கள் - கவிதைகள் (மரபு மீறல்) - அச்சில்

## மின்நூல்

3. நவீன ஆத்திசூடி - விலை - அன்பு
4. முகநூல் சுவடுகள் - தொகுப்பு- விலை - அன்பு
5. வித்தாகும் விழுதுகள் - கவிதைகள் (மரபின் வழியில்) ரூ.40/-
6. கரவா ஒளிச்சுடர்– கவிதைகள் (குறுநூல்) ரூ.10/அன்பு
7. சின்னச்சின்னப் பூக்கள்-கவிதைகள் (குறுநூல்) ரூ.10/அன்பு
8. சிந்தனைக் கோலங்கள்—கவிதைகள் (மரபின் வழியில்) -ஒளி அச்சில்
9. தேடிய கலன்கள்—கவிதைகள்(குறுநூல்) - ஒளி அச்சில்
10. மனக் கீற்று—கவிதைகள் (குறுநூல்) ஒளி அச்சில்
11. முகவரி தேடும் அகவரிகள்-கவிதைகள் (மரபு மீறல்) —ஒளி அச்சில்
12. விழுமிய வேர்கள்- (மரபின் வழியில்) ஒளி அச்சில்
13. கண்டதும் கேட்டதும்- கட்டுரை(ஒளி அச்சில்)
14. தீர்க்க தரிசனம்—கட்டுரை(ஒளி அச்சில்)
15. ஒளிதரும் ஓசைகள்-(இசைப் பாடல் - ஒளிஅச்சில்)

செங்கோட்டைப் பாசஞ்சர் சிறுகதைகள் (அச்சில்)

இவற்றுடன்,
**கனவின் ஓசைகள்**
பதிவிறக்க—ரூ 45/-
அஞ்சலில் ரூ 85/-

# ஞாயிறே போற்றி!



பேரொலியில் பிறந்து;
நல்ஒளியாய்த் திகழும்,
உன்னுடல் பிரிந்த,
ஊனாம் இவ்வுலகினில்,
உயிர்ப்பல வாழும்!
வாழ்பவை வாழ,
வாழ்வதை நிறைக்கும்,
ஞாயிறே போற்றி! போற்றி!!

**05-04-2020**

## எது அழகு?



புள்ளினங்கள் சிறகொலிக்கும் புலர்காலைப் பொழுதழகு!
துள்ளிவரும் கன்றினங்கள் தாயின்மடி சேர்தலும் அழகு!
பள்ளிப் பருவத்தில், பெருமைக்குச் சொல்லும் பொய்யழகு!
கள்ளைத்தேடிச், சுற்றும் அந்த ஈக்கள் எழுப்பும் ஒலியழகு!

வெள்ளைப் பூக்களின் வடிவும் தருமந்த விலையில்லாப்  அழகு!
கிள்ளைச் சுமந்த மகள், கீழ்மூச்சு கொள்ளும் நடையும் தனியழகு!
பள்ளம் நோக்கிவரும் பேரருவி, நீர்த்திவலை பூணும் கலையழகு!
கள்ளமில் குழந்தைக் கைகொட்டிச் சிரிக்க எழும் ஒலியழகு!

**12-01-2020**





# காதல்!



அன்னையின் காதல் அன்பைக் காட்டும்;
தந்தையின் காதல் அறிவைக் கூட்டும்;
தமையனின் காதல் தகைமைச் செய்யும்;
தம்பியின் காதல் தோளை உயர்த்தும்;
தங்கையின் காதல் நட்பைச் சொல்லும்;
தமக்கையின் காதல் பரிவைக் காட்டும்;
ஆசான் காதல் உண்மையை விளக்கும்;
நண்பனின் காதல் உரிமையைக் காக்கும்;
மனைவியின் காதல் நெகிழ்வில் திளைக்கும்;
இறைவனின் காதல் இயன்நிலை உணர்த்தும்!

**14.02.2015**

# தீபாவளி!


காது கிழிந்தது;
காகிதக் குவியல்;
புகை மண்டலம்;
கரிப்புகையில்,
சரசரக்கப் புத்தாடைகள்!



ஏக்கப் பெரு மூச்சில்,
கிழிந்த பாவாடைகள்!
**08-11-2004**



# வானவில்!



சிறுதுளி நீரில் பெருவழியாக,
வானம் காட்டும் வண்ணக் கோலம்;
காலையோ மாலையோ கண்களை நிறைக்கும்!

வண்ணத் துளிகளாய்,
 வானில் தோன்றும் புதிய வீதி!
சில மணித்துளிகளே சீரோடு இருக்கும்;
காற்றில் கலைந்து காணாமல் போகும்!



அற்ப ஆயுளாய் ஆகி நின்றாலும்,
அனைவர்  மனத்திலும் அழியாக் கோலம்! - அது,
இறைவன் கொடையோ இயற்கை விதியோ!

**08-03-2012**      —0---


# கனவு!

உறங்கும் விழி,
உறங்கா நினைவு;
ஆடா மனம்,
அசை போடும் தினம்!

பொன்னைக் குவித்த கனவு;
புல் முளைத்தத் தரையில்,

யார் தேடுவார்?
செல்லரித்து மக்கிய,
உடம்பிலிருந்து.....!

**17-11-2004**



# <u>பிறப்பறுப்பாய்!</u>

பிறப்பறுப்பாய் இறையே! பிணியறுப்பாய்!!
பேதமையாய் மனம்செய்யும், சூதறுப்பாய்!
சிறப்பில்லா வாழ்வினிலேத் தொய்ந்திடுமோர்,
சீரில்லா மனம் தனையும் காத்திடுவாய்!
அறமேதான் வாழ்வென்று, யாவருக்கும்,
அனுதினமும் நாமுரைத் திட்டாலும்,
திறமென்று தனைத் தானே ஏற்றுமந்தத்,
தீதான மனச்சுமையைக் களைவாய்நீயே!

**24-3-2020**

## மழை!

பூக்களின் மகரந்தம்,
வெடிக்கக் காத்திருக்கும்!
கன மழை;
பறந்தன காற்றில்,
பழங்கள் இல்லை....!
நடுங்கியக் குளிர்;
ஜன்னலுக்கு அப்பால்,
மெட்டி ஒலி............!



08-11-2004

# மாகவி பாரதி



இணையில்லாப் இப்பெருங் கவிஞன்,
இருபதாம் நூற்றாண்டின் தனிக் கொடையாம்!
பண்டிதர் தமிழைப் பாமரர்க்கும் சொன்ன கவி!
தாய்நாடு, தாய்மொழி எனவாய் தரணிபுகழ்,
சொற்பதங்கள் சொன்ன கவி, பெண்மைசீர்
பெருமைக்கும் பாடிவைத்தான், பாவலர்க்கும்,
பாட்டிசைக்கும் யாவருக்கும் சொத்தானான்!
சிந்தாமல் தமிழ்ச்செய்த சீராளன் பெருமைதனை,
இந்நாளில் நினைந்துப் போற்றிடுவோம்!
வாழிய பாரதி, வாழிய செந்தமிழ்
வாழிய பாரத மணித்திரு நாடு.!


**11-09-2019**

# <u>கவிதையதோ!</u>

நித்தம் நித்தம் எழுதுவதால், கவிதையதோ கவிதை!
சத்தமின்றிப் பாபுனைந்தால், சரித்திரந்தான் பெறுமோ!
தத்துவமோ தனிமொழியோ தகைவு செய்யும் அழகோ!
மத்தளமோ மறிகடலோ மானுடத்தின் கலையதுவோ!

முத்தாகச் சொல்லடுக்கி முகிழ்கின்ற அறிவோ!
நித்திலமோ நிறைகுடமோ நீள்சங்கின் ஒலியோ!
முத்திரையோ முகவடிவோ முகிழ்கின்ற அமிழ்தோ!
எத்திசையும் மணக்கின்ற செந்தமிழின் வடிவோ!

**13.01.2016**



# உலகியல் அறிந்திடு!

அறிவினில் தேங்கும் தாக்கம்,
ஆசையின் பின்புலம் ஆகும்!
குறியீடு இல்லா முயற்சி,
கோள்வினை யென்றே கூறும்!
அறிவியல் பார்வை கொண்டால்,
அகத்தினில் அழகு சேரும்!
மாறிடும் உலகியல் தெளிந்தால்,
மருவிலா இன்பங்கள் கூடும்!



**01-04-2017**

# நிரந்தரமோ?



சுடும் சொல்லே நிரந்தரமோ;
கடும் சொல்லே பெறும் வரமோ!
விடும் மூச்சே செந்தழலோ!
படும் பாட்டைப் பாராயோ!!

வடம் பிடித்த தேரிதுவே;
புடம் போட்டதென் மனமே!
தடம் தேடு நல்மனமே!
நடம் புரியும் நல்வாழ்வே!

**06-12-2015**

# இராமா னுஜர்

அமிழ்தென நிறைந்தார் மண்ணில்,
அவதாரப் புருஷனாக!
தமதென இல்லா மாண்பில்,
தனியனாய் நின்றார் ஏகி!
உமதென்றும்; எமதென்றும்;
உரிமையில், இலராகி,
தமதென்று இறைவன் சொல்ல,
"**உடையவர்**" ஆகினாரே!



அன்பினால் திளைந்த மனங்கள்,
அனுதினமும் அவரை நினைக்கும்!
கன்னலின் சாறைப் போலே
கனிவுடை அன்பின் ஏந்தல்
மன்னிய பெருமைக் கெல்லாம்
மருவிலா அறிவின் கோமான்!
இன்னியத் தமிழால் அவனை
இறையவன் நெஞ்சில் கொண்டான்! 29-04-2017

# அவள்!

நிலவுக்குப் பின்னால் ஒரு நிலவு – அவள்
நெற்றி முடிச்சில் தொடங்கும் ஆயிரம் கனவு!
தொடங்கும் கனவில் தொடரும் நினைவில்,
மலரும் காதல் மலர்கள்; காலச் சுவட்டில் - ஒரு
கவிஞனைப் பிறப்பிக்கும் வசந்த கீதம்!- இது
ஒரு காதல் மனத்தை கவிஞன் ஒருவன்,
பிடித்துக் காட்டிய பாடம் – ஆதலினால்,
காதல் செய்வீர்! கவிதை மலர, கவிஞன் பிறக்க!
மொழிக்குப் பின்னால் மனிதமும் வளரும்!

**15-11-1994**



# பூமனமே!

பட்டமரம் பூத்திடுமோ! காய்ந்தநதி பாய்ந்திடுமோ!
முற்றாதக் கனிவிதை யும்தான் முளைத்திடுமோ!
பற்றாத உறவுகளும் பார்த்திடுமோ தனியுலகம்!
கற்காதக் கல்வியுடன் கனவுகளும் சாய்ந்திடுமோ!
வற்றாதே அறிவுமனம்; வாழும்வரை துணைநிற்கும்!
நேர்முறையில்  தேடிடுங்கள்! நெகிழாது மகிழ்ந்திடுங்கள்!
நிதம்நிதமும் நித்திலமாய் மனம்பூ பூக்கும்!

**03-07-2016**



# ஒரு வாழ்த்து!



அற்புதக் கீர்த்தியோடும்,
அருந்தவப் பேற்றியோடும்,
சொற்சுவைப் பெறுதலாலே,
சுகம்பெறும் தமிழைப்போலே,
பொற்பதம் பணிந்து ஏகி,
பொலிவுசூழ் இறையின் அருளால்,
அற்புத வாழ்வு வாழ,
அரியநாளில் வாழ்த்துவேனே!

**20-02-1996**

# கண்ணதாசன்!

வித்தை இதுவென; வேதம் இதுவென;
தத்துவத் தமிழ்மொழி தந்த கவியரசே!
முத்தம் இதுவென, மோகம் இதுவென,
தத்தைமொழிபல **கண்ட கவியரசே**!

சந்தக் கடலிடை விந்தைத் தமிழை,
சொந்தம் கொண்டாடிய எங்கள் கவியரசே!
வண்ணத்திரையில் வாழ்க தமிழெனச்,
சங்கத்தமிழும் சாற்றிய தமிழ் முரசே!


மின்னல் கொடியிலும், மேவிய நுதலிலும்,
தத்துவம் கற்றுத் தமிழை வளர்த்தவனே!
தத்துவக் கடலினில், ‘முத்’தாய்ப் பிறந்த,
‘முத்து’த் தமிழ் மகனே எங்கள் கவியரசே!

==0==



# மாயக் கோலங்களோ!

வானம் எனது; பூமி எனது;
வாழ்க்கை எனது கோலங்களே!
கானம் எனது; காட்சி எனது;
கடவுள் செய்த மாயங்களோ!



-வேறு-

தோளும் தாளும் நிமிர்ந்த போதும்,
கோளும் நாளும் நகர்ந்த போதும்,
மாலை இருளாய் வளர்ந்த போதும்,
இயற்கை என்னும் பெயரைச் சொல்லி,
இறைவன் செலுத்தும் மாய ஆட்சி!

**21-08-09**

# வருவாயா?

அன்பை என் நெஞ்சினிலே ஆடை கட்டி  வெச்சிருக்கேன்;
இன்பம் என்னும் பூமழையால், ஈடுகட்ட வருவாயோ!
என்றன் மனம் பூந்துகிலே ஏழிசையின் நற்சுவையே!
ஐயிரண்டு திங்களிலே ஓங்காரம் பிறந்து விடும்!



கன்னி மனம் சாய்ந்திடுமோ காதல் வலைச் சேர்ந்திடுமோ!
ஆடைகட்டி ஊடலுக்குள் தேடல் எதற்கு?
வாடை காற்றின் ஊதலுக்குள் போர்வை எதற்கு?
மேடைகட்டி ஆடுகையில் சதங்கை எதற்கு?

**21-08-2009**

# பள்ளி!

அறிவைச் செறிவாக்கும், ஆனந்த கூடம்!
ஆட்டமும் கூத்துமாய் ஆயக் கலைகள்;
அனைத்தும் கற்கும் ஆலயமாகும்!
வாழ்க்கைப் பாடத்தின் வகையதை அறிய,




ஏட்டுப் பாடமே முதல் விதை யாகும்!
காட்டுப் பூக்களாய்க் கனிந்த மனங்களை,
கோத்துச் சரமாய்க் கொண்டாட வைக்கும்!
மாற்றாய் வேறு நிதியம் மண்ணில் உண்டோ?

**08-03-2012**

## வாழ்விப்போம்! வாழ்வோம்!!

பொன்னோடும், பொருளோடும்,
பொலிகின்ற அழகோடும்,
விண்ணோடும்; முகிலோடும்,
விளையாடும் நிலவோடும்,
என்நாளும் நடைபோடும்,
எழிலார்ந்தக் கவிஞர்களே!
மண்வாழ மரம் நடுவோம்!
மனம்வாழக் கவிபடைப்போம்!

**12-04-1991**



## <u>நீதியின் சட்டம்!</u>




நீதியின் கரங்களில்,
நிம்மதித் தேடும் மார்ந்தர்க்குச்
சட்டம் ஒரு விளக்கு என்பர்,
ஆம்,
அதில் வீழும்
விட்டில் பூச்சிகள் ஆவது,
அந்தச்
சாதாரண மனிதர்கள் தானே!

**24-09-1991**

# வாழ்க்கைச் சுரங்கம்!

சாலையைக் கடக்கையில்;
வாகனத்தில் சிக்காமல்,
கடப்பவர் தப்பிக்கச்
சுரங்கப் பாதைகள்!
ஆனால்,
இன்நாட்டு,
மன்னர்கள் சிலர்;
இல்லறம் காண்பதுவும் கூட
இங்கேதான்!

**23-08-1991**



# அமாவசை நிலவு!

முதுகுக்குப் பின்னால் ,
முகம் காட்டும் நிலவோ நீ!

கனவுகளால், காகிதப்பூக்களில்;
மனம் தேடினேன்!

பவுர்ணமி காணாத வானமாய்,
இமைகளுக்குள் கலைந்து போயின,
கனவுக் கோலங்கள்!

பாடிய வானம்பாடி,
பறக்காத பட்டாம் பூச்சி யானேன்!

**23-11-2001**



# ஒரு சொல் கேளிர்!

தேடிய செல்வம் நிலைத்திட வேண்டும்!
வாடியப் பயிர்கள் செழித்திட வேண்டும்!!
கூடிய நட்பு வளர்ந்திட வேண்டும்!!!
பாடிய வரிகள் ஈர்த்திட வேண்டும்!!!!


நாடிய உறவுகள் தழைத்திட வேண்டும்!
ஆடிய கால்கள் மகிழ்ந்திட வேண்டும்!!
மூடிய மேகம் பொழிந்திட வேண்டும்!!!
ஊடிய மனங்கள் கூடிட வேண்டும்!!!!

==0==



# மனிதனைத் தேடினேன்!

தெருவெங்கும் தேடினேன் ,மனிதனே தெரியலே!
உருவங்கள் ஆயிரம்,  ஊனுடல் தாங்குமே!
பருவங்கள் தாக்கிடும், பார்வைகள் ஓர்புறம்!
புருவங்கள் குறுகியேப் புலன்நிலை மிருகமே!



கருவங்கள் நிறைந்தவன்; கற்பனைச் சிங்கமே!
மருவெல்லாம் மனதுள்ளே;  மானிடன் மறைவானே!
உருவங்கள் ஆயிரம் மிருகங்கள் ஆகுதே!
தெருவெங்கும் தேடியும் தெரியலை மனிதனே!!

**11-07-1990**

# திறனே ஏகும்!



கற்பனை நிறைக்காது வயிறு;
கரையைத்தொடாது வானம்!

அற்புதமானது வாழ்வு; நாளும்,
அகலாத நம்பிக்கைத்தோளில்!


சொற்சுவை நிரம்பாத பாடல்,
சுவையில்லா உணவின் தோழன்!

பற்பலர் போற்றும் அறிவின்,
பன்முக திறனே ஏகும்!
**22.08.2015**

# பொங்கல் திருநாள்!

ஞாயிற்றின் ஒளியே தானும்;
நலமுடன் வடக்கில் திரும்ப,
போயிற்றேத் துன்பம் என்று;
பொங்கிடும் உழவர்க் கூட்டம்!
சேயுற்ற மகிழ்வாய்க் கூடி,
செந்நிறை ஆவினத் தோடும்,
காயும்சீர் பகல னுக்கும்;
காணும் நற்பூசெய் யாமே!

**17-12-1997**





## நூலாசிரியர் குறிப்பு

இந்நூலாசிரியர், இன்றையத் திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண் அரசில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து தற்போது, பணி நிறைவு கொண்டுள்ளார். சென்னையை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார். அடிப்படையில், கணித மாணவர்; முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினிப் பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் முதுகலைப் பட்டத்தோடு, இளநிலைச் சட்டவியலும் பயின்று, தேர்ச்சிப் பெற்றுள்ளார். ‘கல்வியில் கரை இல’ என்பதாக விளங்குகிறார். எழுத்தும் எனக்கொருப் பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இவருக்கு, இதுவும் ஒரு வல்லமையாக விளங்குகிறது, எழுத்தாற்றலோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையோடு, கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, “கனவின் ஓசைகள்” எனும் பெயரில் தற்போது, ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர்.

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு,
**செம்பாக்கம், சென்னை - 73**
**அலைபேசி: 99400 61280**
**www.ezhuththukkalam.co.in**
**www.epublish.co.in**